**சாட்சியின் வாக்குமூலம்**

**திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்**

**அசல் வழக்கு எண் : 241/2015**

**PW1 – திருமதி. சுமதி, க/பெ. முனிவேல்**

## 19.03.2025

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**நேரம் 12.55 மணி**

என் வாதுரையில் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து நடைபெற்றது குறித்து குறிப்பிட்டுள்ளேன், அதில் ஊர் பெரியவர்கள் யாரெல்லாம் கலந்து கொண்டார்கள் என்றால் அவ்வாறு பஞ்சாயத்து ஏதும் நடைபெறவில்லை. பஞ்சாயத்து நடந்து என் தந்தையின் வங்கி கணக்கிலிருந்து பணம் மற்றும் என் தந்தையின் பெயரில் உள்ள சொத்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆகவே பாகப்பிரிவினை முடிந்து என் பாகத்தை நான் பெற்றுக்கொண்டேன் என்றாலும் அதன்பிறகு மேலும் பாகம் ஏதும் கோரமாட்டேன் என்று உறுதி கூறினேன் என்றால் சரியல்ல. நான் 16/10/2015 அன்று பிரதிவாதிகள் 1 மற்றும் 2 ஆகியோருக்கு வழக்கறிஞர் அறிவிப்பை ஏன் அனுப்பினேன் என்றால் மணி என்பவர் எங்கள் இடத்தை எங்களை கேட்காமல் ஒப்பந்தம் போடுகிறார் என்று நோட்டீஸ் அனுப்பினேன். அந்த ஒப்பந்தத்தின் நகல் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. அந்த ஒப்பந்தம் எந்த தேதியில் போடப்பட்டது என்றால் நான் நோட்டீஸ் அனுப்புவதற்கு 4 நாட்கள் முன்பதாக போடப்பட்டது. ஒப்பந்தம் எவ்வளவு தொகைக்கு போடப்பட்டது என்றால் ரூபாய் 12 லட்சத்திற்கு கிரையம் விலை பேசியிருந்தார்கள் என்று மட்டும் தெரியும். எந்த இடத்தில் கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் வெங்கடேஸ்வரா நகரில் உள்ள 1840 சதுர அடி போடப்பட்டது. அதன் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்கூறிய விவரத்தை மணி என்பவருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். அவர் வழக்கறிஞர் அறிவிப்பில் எதுவும் குறிப்பிடவில்லை என்றாலும் எனக்கு உரிமை உள்ளது என

மட்டும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கை திசை திருப்பவே மணி என்பவரை இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எத்தனை சொத்துக்களை பாகம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 91 சென்ட், 1840 சதுர அடி மற்றும் ஒரு பிளாட், வீட்டுமனை கிராம நத்தம் 5 சென்ட், வீட்டின் எதிரில் உள்ள காலி மனை 2½ சென்ட், என் அம்மாவிற்கு அவர் வீட்டில் கொடுத்த பாகமான 55 சென்ட் ஆகியவையாகும். மேற்கண்ட சொத்திற்கான சர்வே எண்கள் எனக்கு தெரியுமா என்றால் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். தற்போது சர்வே எண் எனக்கு ஞாபகமில்லை. பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள சொத்தின் சுவாதீனம் சர்வே எண் 238/2, 90 சென்ட் யாரிடமிருந்து பெறப்பட்டது என்றால் மகேஸ்வரி மற்றும் அவரது 4 மகன்களிடமிருந்து 28/02/1996ல் பெறப்பட்டது. அது பதிவுசெய்யபட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சொத்தின் ஆவண எண் 827/1996 மூலமாக கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பிரதிவாதி பாண்டியன் பெயரில் உள்ளது என்றாலும் என் தந்தையின் பெயரில் இல்லை என்றால் சரியல்ல. பாதி சொத்து அனுராதா என்பவருக்கு விற்கப்பட்டது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தொடுத்த பிறகு 2016ல் விற்றுள்ளார்கள். ஆவண எண் 5887/2016 தேதியிட்ட 10/06/2016 மூலமாக விற்கப்பட்டுள்ளது என்றும் அதனை ரத்து செய்யக்கோரி தற்பொழுது இந்த பரிகாரம் கேட்க இயலாது என்றால் சரியல்ல. அண்ணாமலை என்பவர் யார் என்றால் எனக்கு தெரியாது. ஆதிமூலம் அண்ணாமலையிடம் அதிகாரம் பத்திரம் வாங்கியுள்ளாரா என்றால் சரியல்ல.

**மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கு வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.